திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு மட்டும் கால்பந்து போட்டி, ஹாக்கி போட்டி போன்ற பந்தயங்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களைப்போன்ற இளைஞர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் போட்டிகளிலே ஈடுபடுவதற்கு வாய்ப்பு அளிக்கின்ற முறை பொங்கல் திருநாளன்று போட்டி நடக்கிற அளவிலே வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அதில் எல்லாம் கலந்துகொண்டு அதில் தேர்வு பெற்று, மாநில அளவில் நடக்கும் போட்டிகளில் கலந்துகொண்டு இந்த மாநிலத்திற்கு நற்பெயர் ஏற்படுத்தித் தரலாம். தனிச் சலுகைகள், தனியாக உபகாரச் சம்பளம் ஒன்றும் வேண்டியதில்லை. மாநில அளவில் சிறந்த வீரர்கள் மாணவர்கள் அல்லாதவர்களுக்கு 10 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. அந்த ரூ. 300 உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாநிலத்தில் தேர்ச்சி பெற்று வருகிற 10 பேர்களில் ஒருவராக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திகழவேண்டும்.

Primary Health Centres.

* 86 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state the names of places where Primary Health Centres are to be started in Kanyakumari district?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 வட்டாரங்கள், ஒன்றியங்கள் உள்ளன. எல்லா வட்டாரங்களிலும் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. என். டென்னிஸ் : ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இரு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்பட திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. எப்பொழுது அது நடைமுறையில் வரும்? அப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல் கட்டமாக எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது, மத்திய சர்க்காருடைய குடும்ப நலத் திட்டத்துடன் இணைந்து ஒவ்வொரு சுகாதார நிலையமும் ஒரு குடும்ப நல

மருத்துவ மனையுடன் சேர்ந்து இயங்குவதாகும். ஆகவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது குடும்ப நல மருத்துவ மனையை ஏற்றுக் கொண்டால், அதனோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை இணைத்து, ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது இடத்தில் தொடங்கு வதற்குத் தமிழக அரசு மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறது. மத்திய அரசு அதை இன்னும் ஏற்றுக்கொண்டு முடிவாக அறிவிக்கவில்லை.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புது கட்டடங்கள் கட்டும்பொழுது பழைய கட்டடங்களுக்கு காம்பௌண்டு சுவர் கட்டுவதற்கு வசதி செய்யப்படவில்லை. காம்பௌண்டு சுவர் மிக முக்கிய மானது என்பதனால், இனிமேலாவது அதற்குரிய வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுற்றுப்புற சுவர் என்பது பொது மக்கள் அந்த மருத்துவ மனையை மதிக்காத போது மிகவும் அவசியம். பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துத்தான் நாம் ஆரம்ப சுகாதார நிலை யங்கள் கட்டுகிறோம். பொது மக்கள் மருத்துவமனைகளைத் தவறாகப் பயன் படுத்துவார்கள் என்று எதிர்பார்த்து மருத்துவ மனைகள் கட்டப்படவில்லை. மருத்துவ மனை கட்டுவதற்கே ரூ. 1¾ அல்லது 2 லட்சம் தேவைப்படுகிறது. சுற்றுப்புற சுவர் கட்டுவதற்கு ரூ. 35,000 செலவாகிறது. ஏறத்தாழ 5 ஏக்கரா நிலத்திற்குக் கட்ட வேண்டும். ரூ. 35,000, 40,000 செலவழித்து சுற்றுப்புற சுவர் கிராமத்தில் கட்ட வேண்டும் என்பதை அரசாங்கத்தின் பொருளாதார நிலையை வைத்து சிந்தித்துப் பார்க்கும்பொழுது, பல நேரங்களில் அந்தத் திட்டத்தை ஒத்தி வைக்க நேருகிறது.

* 87 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், முத்தூர் என்ற ஊரில், ஈரோடு சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(உ) அச்சுகாதார நிலையத்தின் கட்டடம் அரசினர் செலவில் கட்டப் பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 3–2–1955.

(உ) இல்லை. அச் சுகாதார நிலையத்தின் கட்டடம் உள்ளூர்வாசிகளின் பண உதவியின் பேரில் கட்டி முடிக்கப்பட்டதாகும்.